**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**<u>S.T.C. No. 188/2023</u>**

Name : அன்வர்நிஷா PW1 Date : 28.05.2024

Husband Name : அக்பர் அலி :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

ஆஜர் எதிரி S.T.C.187/2023 என்ற வழக்கில் உள்ள எதிரியின் கணவர் என்றால் சரிதான். எதிரி என்னிடம் விற்பனை செய்த வீட்டு மனை யார் முன்னிலையில் விற்பனை செய்தார் என்றால் காராம்பள்ளத்தை சேர்ந்த கருணாநிதி, எனது அக்கா பானு, எதிரியின் மனைவி ரஹமத்நிஷா ஆகியோர்கள் முன்னிலையில் விற்பனை செய்தார். நோட்டரி பப்ளிக் செய்துகொடுத்த வழக்கறிஞரை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 12 வருடங்களாக தெரியும். எதிரிக்கு நான் கொடுத்த பணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் நான் எனது பூர்வீக வீட்டை இடித்து கட்டுவதற்காக சேமித்து வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். நான் வருமானவரி செலுத்துபவரா என்றால் இல்லை. எதிரி எனக்கு விற்பனை செய்த வீட்டு மனையும், பகுதி பாத்தியத்தை எத்தனை நாட்களாக மாற்றி தராமல் இருந்தார் என்றால் 9 மாதங்களாக மாற்றித்தராமல் ஏமாற்றி வருகிறார். எதிரியை எனக்கு பகுதி மாற்றம் செய்து தரக்கோரி அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை தொலைபேசி வாயிலாக கேட்டேன்.

என்னிடம் விற்ற மனைப்பகுதியின் பூர்வீக பாத்தியம் யார் பெயரில் உள்ளது என்றால் எதிரியின் தந்தையின் பெயரிலிருந்து எதிரியின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. காசோலையை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால், நான்தான் பூர்த்தி செய்தேன். நான் பூர்த்தி

செய்த பிறகு எதிரி அதில் கையொப்பம் செய்தார். எதிரிஎன்னிடம் எந்த தேதியில் பணம் வாங்கினார் என்ற விபரத்தையும் அவரது வீட்டு மனையை விற்பனை செய்வதற்காகத்தான் என்னிடம் பணத்தை பெற்றார் என்ற விபரத்தையும் நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். தற்போது எதிரி எனக்கு விற்பனை செய்த வீட்டுமனை யாரிடம் உள்ளது என்றால் எதிரி எனக்கு அந்த மனையை பகுதி மாற்றம் செய்து தராததால் நான் வீட்டு மனை வேண்டாம் எனக்கூறி எதிரியிடமிருந்து பணத்தை திரும்ப கேட்டேன். இந்த மனை சம்பந்தமாக நான் எந்தவொரு உரிமையியல் வழக்கும் எதிரிக்கு எதிராக தொடரவில்லை என்றால் சரிதான். எதிரி எனக்கு ரூ.5 லட்சத்திற்கு காசோலை எழுதிக்கொடுக்கும்போது தற்போது ரூ.5 லட்சத்திற்கு காசோலை தருகிறேன் மீதமுள்ள ரூ4 லட்சத்திற்கு இரண்டு மாத கெடுவிற்குள் கொடுப்பதாகக்கூறி கடன் பத்திரம் ஏதேனும் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை.

அவரது வீட்டின் பகுதி பத்திரத்தின் அசல் என்னிடம் கொடுத்துவிட்டதால் கடன் பத்திரம் எழுதி வாங்கவில்லை. எதிரிக்கு காசோலை தொகையை கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் காசோலையை யாரிடமிருந்தோ மோசடியாக பெற்று வசூலுக்காக வங்கியில் செலுத்தி எதிரியின் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த காசோலையை நானே பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி எந்தவிதமான மோசடியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கத்தில் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் காசோலையை தவிர வேறு எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு எதிரி மீது தாக்கல் செய்யப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.